"செய்து செய்து கற்றல்"

# நவீனக் கல்வி

பத்திராதிபர்கள்: Rev. H. A. பாப்லி, B. A.
ஸ்ரீ J. T. ராஜநாயகம், B. A., L. T.

மலர் 3. } ஈரோடு, ஆகஸ்ட் 1942. { இதழ் 3.

உள்ளுறை

1 செய்முறைக்கல்வியும், கல்வித் தேர்ச்சியின் அளவும்... 1

2 ஆரம்ப வகுப்புகளில் தாய்மொழிப் போதனை. ... 6

3 பாடசாலை ஆண்டுவிழாப் பிராஜெக்ட். ... ... 8

4 வகுப்புத் தோட்டப் பிராஜெக்ட். ... ... 17

5 உங்களுக்குத் தெரியுமா? .. ... ... 23

# வாழ்த்துப் பாட்டு.

1 வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!

2 அறம் வளர்ந்திடுக! மறம் மடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேயத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

சுப்பிரமணிய பாரதியார்.

---

1 ஆண்மை கொண்ட தமிழர் கூட்டம் வாழ்க வாழ்கவே,
அச்சம், அடிமை, மடமை, வறுமை, வீழ்க வீழ்கவே,
சேண்மை கொண்ட தமிழர் கூட்டம் வாழ்க வாழ்கவே,
கேடு சூழும் புல்லர் கும்பல் வீழ்க வீழ்கவே.

2 புதுமை பெற்ற வீரத்தமிழர் வாழ்க வாழ்கவே,
பொய்யொழுக்கம் போற்றும் தீமை வீழ்க வீழ்கவே,
பொது நலத்தில் உயிர்வழங்கும் தமிழர் வாழ்கவே,
பொறாமை கொள் அரக்கத்தன்மை வீழ்க வீழ்கவே.

3 திறமை ஓங்கும் அறிஞர் கூட்டம் வாழ்க வாழ்கவே,
செயலில்லாத வெற்றுரைகள் வீழ்க வீழ்கவே,
அறமும், திருவும், அருளும் பொருளும் ஆற்றலாயுளும்,
அருமைத் தமிழர் ஆண்டு நீடு வாழ்க வாழ்கவே,

4 சமரச சன்மார்க்கத் தமிழர் வாழ்க வாழ்கவே,
ஜாதி மத பேத சண்டை வீழ்க வீழ்கவே,
அமர வாழ்வை வேண்டும் தமிழர் வாழ்க வாழ்கவே,
அன்னை அன்னை என்றுயிர்க்கும் தமிழர் வாழ்கவே

சுவாமி சுத்தானந்த பாரதியார்.

# நவீனக் கல்வி

பத்திராதிபர்: Rev. H. A. பாப்லி, B. A.

மலர் 3. | ஈரோடு, ஆகஸ்ட் 1942. | இதழ் 3.


## செய்முறைக் கல்வியும், கல்வித் தேர்ச்சியின் அளவும்.


ஸ்ரீ J. T. ராஜநாயகம் B. A., L. T.


எந்த முறைப்படி கல்வி கற்ற போதிலும், சிறுவர் கல்வியில் எல்லோராலும், ஒப்புக்கொள்ளக்கூடிய பிரகாரம், அவர்கள் ஒரு திட்டமான கல்வி அளவிலும், தன்மையிலும் கற்றே தீர வேண்டுமென்பது அத்தியந்த அவசியமானது. இவ்விஷயத்தை வற்புறுத்துவதே இவ்வியாசத்தின் நோக்கமாகும்.

ஆரம்பக் கல்வியின் நோக்கங்களிலொன்று யாதெனில், சிறுவர், சிறுமிகள் நன்றாய் எழுத வாசிக்கக் கற்பதின் பயனை அவர்கள் தங்களது வாழ்க்கையில் தாங்கள் அடைந்த 'அறிவை' தினசரி உசிதமான பிரகாரம் பயன் படுத்த வேண்டுமென்பதே யாகும். அதாவது வாழ்க்கை சம்பந்தமான கணக்குகளையும், கடிதம், வியாசம், புஸ்தகங்களை வாசித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வதோடுகூட பிறரிடமும் அவைகளைப்பற்றி எடுத்துச் சொல்லக் கூடிய சக்தி வாய்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்பதேயாகும்

இந்த முக்கிய எண்ணம் பூர்த்தியாக வேண்டுமேயானால், முதல் ஐந்து வகுப்புகளில் தேர்ச்சி பெற்று வெளியேறும் சிறுவர், கற்கும் பாடங்கள் ஒருவகைத் திட்டமான 'அளவையும்', தன்மையையும் உடையதாயிருக்க வேண்

ும். இத்தாரணத்தை முன்னிட்டே கல்வியிலாகா ஒரு திட்ட ...... பாடத்திட்டம் ஏற்படுத்தி ஆரம்பப் பள்ளிகளில் ..... பட வேண்டுமென்று முடிவு செய்து அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

ஆகவே, ஆரம்ப ஆசிரியர் யாவரும் எந்த முறையைக் கையாண்ட போதிலும், அதாவது பரம்பரைப் புத்தக முறையானாலும், கிண்டர்க்கார்ட்டன் முறையானாலும், செய்முறையானாலும் இவைகளெல்லாம் மேற்கூறிய கல்வித் திட்டத்திலுள்ள எல்லாப் பாடங்களையும், திட்டமாக ஆசிரியர் கற்பிக்க வேண்டுமென்பதேயாகும். அப்படியானால் செய்முறைக் கல்வியைக் கையாளும் ஆசிரியர் இந்நோக்கத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதை சற்று ஆழ்ந்து ஆராய்வதவசியம்.

ஒரு மரத்தின் கனியிலிருந்தே அது நல்ல, அல்லது கெட்ட மரம் என்று நாம் அறிகிறோம். பரம்பரைக் கல்வியைக் காட்டிலும், செய்முறைக் கல்வியே பிரதானமானதென்று சொல்லும் ஆசிரியர் இம்முறை எத்தகைய கற்கனிகளைக் கொடுக்கிறதென்று பார்ப்பதவசியம். நம் முறை உண்மையில் நற்கனிகளைக் கொடுக்கிறதென்று சொல்லும் விஷயத்தை, இம்முறையின் மூலமாய்ப் பயின்ற சிறுவர்களின் அறிவுத் தேர்ச்சியைப் பொருத்ததாகும். சுருக்கிச் சொல்லுவோமானால், பரம்பரைப் பிள்ளைகளைக் காட்டிலும் செய்முறைக் கல்வியின் மூலமாய்ப் பயிலும் சிறுவர்கள் கல்வியறிவில் எத்தகைய நிலையை அடைந்துள்ளார்களென்பதேயாகும்.

இத்தகைய தேர்ச்சியைச் சரிவர அடைய எத்தகைய பிரயாசத்தை ஆசிரியர்கள் எடுக்கிறார்கள்? என்பதுதான் பிரதான கேள்வி. செய்முறையின் மூலமாய்க் கற்கும் கல்வியானது, பரம்பரைமுறை மூலமாய் கற்பிப்பதைக் காட்டிலும், முற்றிலும் வேறுபாடானதே. செய்முறை ஆசிரியர் பாட விஷயங்களைச் சிறுவர்களுக்குக் கல்வித் திட்டத்தில் குறித்துள்ளபடி. குறிப்பிட்ட நோக்கில் குறித்த பாடங்களை வரிசைக்கிரம ..... ல்லியமாயும் ஒரு ஒழுங்காயும் கற்பியாமல், அந்த ..... சந்தர்ப்பத்திற் கேற்றவாறும், வரிசைக் கிரமமில்லாமலும் வேலையின் முன்னேற்றத்திற்கு அத்தியந்த அவசியமான பிர

காரம், கற்பிப்பதானது சிறுவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும், குதூகலத்தையும் கொடுக்கக் கூடியதுமாயிருக்கிறது என்பது நாம் அறிந்த விஷயமே.

சிறுவரை இவ்விதமாகக் கற்கச் செய்வது கல்வியில் நூதனமான முறையேயாம். இவ்விதம் அவர்கள் கற்குங்கால் ஒரு பாடத்தில் சிறுவர்களுக்கு, ஒரு கோர்வையான அறிவின் தொடர்ச்சியிருப்பது கூடாத காரியந்தான். ஆனால், அதை எவ்வாறு ஓர் ஆசிரியர் பூர்த்தி செய்வது' என்பதே முக்கியமான கேள்வியாகும். இதைப் பூர்த்தி செய்ய செய்முறை ஆசிரியர் பல விசேஷித்த முறைகளைக் கையாண்டு வருகின்றனர். அதாவது:—

1. ஒரு சயநோக்க முயற்சி வேலை முடிந்தவுடன், அவ் வேலையின் மூலமாய்க் கற்ற ஒரு பாடத்தின் பல அம்சங்களைக் கோர்வையாக எடுத்துத் திரட்டிச் சிறுவர், நன்கு உணரும்படியாக ஒரு வரிசைக் கிரமப்படுத்தி, பிரத்தியேகமான நோக்கில் திட்டமாக அதில் பயிற்சி கொடுக்கின்றனர். இவ்விதம் பயிற்சி கொடுக்கும் பாடங்களிலொன்று கணிதம். தாய்மொழி எழுத வாசிக்கக் கற்பிப்பது மற்றொன்றாகும். இவ்விதம் கற்பிற்கும் பொழுது, செய்முறையின்படி அனுசரிக்கும், 'கால அட்டவணையை' அவசியம் நேரும் பொழுதெல்லாம், திருத்தி அமைப்பது உசிதமானதாகும்.

2. ஒரு வகுப்புப் பிள்ளைகள் பாடத்திட்டத்தின்படி, கல்வியறிவை அடையவேண்டியதற்காக ஆசிரியர் மூன்று மாதங்களுக்கோ அல்லது ஒரு வருஷத்திற்கோ தெரிந்தெடுத்திருக்கும் பிராஜெக்டின் ஜாபிதா கல்வித் திட்டத்தின்படி எல்லாப் பாடங்களையும் அடக்கியுள்ளதா? என்று வருஷத்துவக்கத்திலேயே சீர்திருத்தித் திட்டம் செய்துவருகின்றனர்.

3 இந்தத் திட்டத்தின்படி சிறுவர், கற்றுள்ள பல பாடங்களின் அம்சங்களைப் பல பிராஜெக்ட்டுகளிலிருந்து, ஒரு ஒழுங்கின் படியும், வரிசைக் கிரமப்படியும் பிரத்தியேகமாக எழுதி, ஒழுங்குப் படுத்திக் கல்வியிலாகாத் திட்டத்தோடு ஒத்திட்டுப் பார்த்து எந்தெந்த அம்சங்கள் கற்பிக்கப்

படவில்லை என்றும், கற்றவைகளெவையென்றும், நன்கு உணர்ந்து கற்பிக்கப் படாதவைகளை வேறு பிராஜெக்டுகளின் மூலமாயாவது, அல்லது பிரத்தியேகமான நேரங்களிலாவது கற்பித்து வருகிறார்கள். இவ்விதம் பாடங்களையும் அவைகளின் அம்சங்களையும், ஒரு ஒழுங்கின்படிப் பிரித்து வகுத்து எடுத்துக் கற்பிப்பதானது சிறுவரின் அறிவுத் தேர்ச்சிக்கு அவசியமான முறை, உசிதமானதேயாகும்.

இவ்விதம் கற்பிப்பதானது சிறுவர் ஒவ்வொரு பாடத்திலும் அடைய வேண்டிய அறிவின் அளவும், தன்மையும் கவர்ன்மெண்ட் கல்வித்திட்டத்துக்கு எவ்விதத்திலும் குறைவு படாததாயிருக்க ஏற்றதாயிருக்கிறது.

4. செய்முறை ஆசிரியர் ஒவ்வொரு பாடத்திலும், ஆங்காங்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கற்பித்த பல அம்சங்களை பிரத்தியேகமான நேரங்களில் போதிய பயிற்சியும், திரும்பத் திரும்பக் கொடுப்பதானது சிறுவரின் அறிவைத் திட்டமாக மனதில் பதியவைக்க ஏதுவாயிருக்கிறது. இத்தகைய பயிற்சியே அவர்கள் அறிவில் அடையவேண்டிய தேர்ச்சிக்கு ஓர் முக்கிய சாதனமாகும்.

ஆகவே இதுவரை பார்த்த விஷயங்கள் மாத்திரம் போதாது. செய்முறை ஆசிரியர் எடுக்கும் பிரயாசங்கள் நன்மையானதுதான். ஆனால், சிறுவர் கல்வியில் சரியான தேர்ச்சி அடைந்துள்ளார்களாவென அவர்களைப் பரிசோதிக்க வேண்டிய சில அவசியமான முறைகளை அடுத்தபடியாகக் கவனிப்பதவசியம்.

1. செய்முறை வகுப்பாசிரியர் இரண்டு அல்லது மூன்று பிராஜெக்டுகள் முடிந்ததும், ஒவ்வொரு பாடத்திலும் தாங்கள் மேற்கூறியபடி கற்பித்த பாடங்களில், சிறுவர்கள் தேர்ச்சியடைந்துள்ளார்களா? என்று வகுப்பு நேரங்களிலும், குறிப்பிட்ட நேரங்களிலும் ஒவ்வொரு பாடத்திலும் அவர்களைப் பரீட்சித்துப் பார்ப்பது அவசியமாகும்.

2. தலைமை ஆசிரியர்கள் தங்கள் உடன் ஊழியர்களின் வேலையானது, இந்த முக்கிய விஷயத்தில் சிறுவர்கள் எவ்வாறு தேர்ச்சியடைந்திருக்கிறார்களென்பதையும் அடிக்கடியும், கால

காலங்களிலும் தாமே நேரில் பரீட்சித்துப் பார்ப்பது பிள்ளைகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாகும். தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யும், ஆசிரியர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கக்கூடும்.

3. இத்தகைய பரீட்சைகளையே பாரம்பரை ஆசிரியர்களும் கையாண்டு வருகின்றனர். ஆகையால், செய்முறை ஆசிரியர் இவ்விதப் பரீட்சைகளைக் கொடுத்துத் தேர்ச்சியின் அளவைப் பரிசோதிப்பது தகுந்ததேயாகும்.

4. ஆனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பாரம்பரைப் பள்ளி வகுப்புக்கும், செய்முறைக் கல்வி வகுப்புக்கும் உள்ள தேர்ச்சியில் இவ்விரு வகுப்புகளுக்கும் நடத்தப்பட்ட பாட அம்சங்களில் ஒரே பரீட்சையின் மூலமாய் இவ்விரு பள்ளிகளின் மாணவரின் தேர்ச்சியை சோதித்துப் பார்த்தாலொழிய சிறுவரின் சரியான தேர்ச்சியின் விபரம் தெரியாது. ஆகையால் செய்முறைக் கல்வியைக் கையாளும் ஆசிரியர்கள் இத்தகைய பரீட்சை செய்வதில் உற்சாகம் காட்டி, தங்கள் முறை உண்மையில் விசேஷமானதென்று ரூபகாரப்படுத்தும் சிலாக்கியம், அவர்களின் மனதிற்கு திருப்தியையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கக்கூடும். தலைமை ஆசிரியர்களும் இந்த விஷயத்தில் விசேஷித்த ஊக்கத்தைக் காண்பிப்பார்களேயாகில் அவர்கள் தங்கள் நவீன முறையைப் பற்றியும் தங்கள் பள்ளிக்கூடத் தேர்ச்சியைப் பற்றியும், பாரம்பரை முறைகளைக் காட்டிலும் தங்களின் முறையாகிய (நவீன செய்முறைக் கல்வி) செய்முறையின் மேன்மையை நன்குணர்ந்து வேலை செய்து வருவார்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

---

# ஆரம்ப வகுப்புகளில் தாய் மொழிப் போதனை.

Sri M. Gnanamanickam Teacher,
Mathrasa Islamia Ely. School, Erode.

எழுத்துக்களைப் பிரதானமாகக் கொண்டு முதல் வகுப்பில் பாஷை கற்பிப்பதில் ஏற்பட்ட பல கோளாறுகள் நிவர்த்திக்கப் பட வேண்டியதின் அவசியத்தை யுணர்ந்த ஆராய்ச்சியாளர் சில அரிய உண்மைகளை வெளியிட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் சம்பாஷணையின் மூலமாக குழந்தைப் பேச்சுத் திருத்திவிடவேண்டும் என்பதும் அதன்மேல் சொற் களின் உருவ அமைப்பையும் பொருளையும் அவ்வப்போதே அறியச் செய்வதுமே பாஷையின் சரியான தேர்ச்சியென்பதும் இக்காலத்து வெளியிடப்படுகிறது.

சென்ற மே மாதத்தில் ஈரோட்டில் நடைபெற்ற வேனிற் கால வகுப்புகளில், கோவை ஜில்லா டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ R. M சாஹூர் அவர்கள் இது பற்றிய பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் செய்தார். பல மேற்கோள்களைக் கொண்டு Phonetic Method என்ற எழுத்துக் கூட்டும் முறைகளிலுள்ள தேர்ச்சிக் குறைவுகளையும், Look and Say Method என்ற பார்த் துச் சொல்லும் முறையிலுள்ள சிறந்த அம்சங்களையும் விளக்கிக் காட்டியதை ஒவ்வொரு முதல் வகுப்பு ஆசிரியரும் நன்றிக் கவனித்தல் அவசியமாகும்.

பொருளைக் கவனியாது வார்த்தைகளை மாத்திரம் கவனிக் கும் ஒரு முறையும் திருப்திகரப்படவில்லை என்பதும். படிக்கும் விஷயம் படிப்பவனுக்குப் பொருள் கொடுக்காதல்லாது படித்த வில் ஒருவனுக்குப் பற்று ஏற்படாதென்பதும், எழுத்துக்களுக் குப் பொருள் கிடையாதாகையால் சிறுவர்களுக்கு அதில் பற்று ஏற்படுவதில்லை என்பதும் வார்த்தைகளை ஆரம்பத்தில் கற்பிக் கும் விஷயத்தில் நாம் ஒரு வஸ்துவைத் தெரிந்து கொள்ளு வதற்கு அதன் உருவத்தைக் கவனிக்கிறோமேயல்லாது அவ்வுரு

வத்தின் பாகத்தை உற்று நோக்கிக் கடைசியாக அவ்வுருவத்தை நிதானிக்கிறதில்லையாகையால், இந்தக் கொள்கையே வார்த்தைகளைக் கற்பிப்பதற்கு அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்பதும்.

ஆகவே, உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பொருள் விளங்கக் கூடிய ஓர் வார்த்தையைக் காட்டி அந்த வார்த்தையின் பெயரைச் சொல்லவும், பிள்ளைகள் அவ்வார்த்தையை மறுபடியும் சொல்லுவதுமே பார்த்துச் சொல்லும் முறையின் முக்கியக் கொள்கை யென்பதும், பல பயிற்சிகள் கொடுக்கப்படுவதின் மூலம் பிள்ளைகள் கற்றுக் கொண்ட வார்த்தைகளை மறவாமலிருக்கும்படி செய்யலாமென்பதும் ஷை யாரின் பிரசங்கத்திற் காணப்பட்ட சில விசேஷித்த குறிப்புகளாகும்.

இக்காலத்தில் முதல் வகுப்புக்கான பல பாடப்புத்தகங்கள், நவீன முறைகளைத் தழுவி எழுதப் பட்டிருந்தாலும் குழந்தைப் பாஷையல்லாத தஞ்சம், லஞ்சம், சங்கடம், ஓடம், ஔடதம் என்பனபோன்ற சொற்கள் பல அவற்றில் காணப்படுகின்றன. பாடப் புத்தகத்திலுள்ள சொற்களை உடனுக்குடனே எழுதத் தெரியவில்லை என்ற புகார்களும் பெற்றோரிடமிருந்து எழும்புகின்றன. முதல் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் ஓர் திட்டம் ஏற்படவில்லை. இந்நிலையில் முதல் வகுப்பு ஆசிரியருக்குப் பொறுப்பு மிகுதி.

இவை நிற்க, சொற்களின் மூலம் பாஷை கற்பிக்க மின்னல் அட்டைகள் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. யுத்த நெருக்கடிகாரணமாக அவற்றிற்கான அட்டை, காகிதங்கள் முதலியன கிடைப்பதும் சாமான்யமாயில்லை. எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் நவீன முறைகளைக் கையாண்டு வருவதில் நாம் தளர்ச்சி அடையக் கூடாது.

குழந்தைப் பேச்சுகளைச் சேகரம் செய்வது, அப்பேச்சுகளைத் திருத்துவது, அவற்றிற்கான சொற்களை அமைப்பது, சொற்களுக்கான படங்கள் பொருட்கள் சேகரிப்பது, சோதனைக்கான அப்பியாசங்கள் கொடுப்பது, பின்னர் எழுத்துப் பயிற்சி செய்வது ஆகியவை கிரமப்படி அனுசரிக்க வேண்டிய படிகளாதும் இந்த ஒழுங்கு பிராஜெக்ட் ஆசிரியருக்கு மிகவும் உதவக் கூடியது.

உதாரணமாகப் பட்டம் செய்யும் பிராஜெக்ட்டில்—பட்டம், காகிதம், புசை, குச்சி, நூல், வால், காற்று மைதானம் ஆகிய சொற்களும் பட்டம் விடு, பட்டம்பார், விற்பட்டம், சதவுப் பட்டம் போன்ற வாக்கியங்களும் குழந்தைப் பேச்சுகளே. அவற்றிற்கான சொற்களைக் காட்ட படங்களையும் பொருட்களை யும் சேகரிப்பது சிரமமான தன்று. பட்டம் விடு, பட்டம் பார் என்பன போன்ற வாக்கியங்கள் செய்கைகளின் மூலம் காட்டப் படலாம். கஷ்டமின்றிப் பயிற்சி செய்யக் கூடிய எழுத்துக்களும் சொற்களில் ஆங்காங்கு பொருந்தியிருக்கின்றன.

ஆகவே பிராஜெக்ட் ஆசிரியர்கள் மேற்கண்ட முறைகளைத் தக்க வழியில் உபயோகித்து முறை நலன்களை ஏனையோருக்கு எடுத்துக் காட்டுவதில் முனைந்து நிற்பார்களாக.

---

## லண்டன் மிஷன் பாடசாலை, காஞ்சிக்கோவில்.

## பிராஜெக்ட்:— பாடசாலை ஆண்டு விழா.

### காலம்:— ஏப்ரலிலிருந்து ஜூன் வரை.

ஆசிரியர்: ஜே. ஜீவமணி. 4, 5 வகுப்புகள்.

Purposing Stage:—

பாடசாலை அதன் வருஷ முடிவை எய்துவிட்டபடியினால் சென்ற வருஷம் நாம் நமது பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தைக் கொண்டாடினதுபோல், இந்த வருஷமும் கொண்டாட, பிள்ளைகள் மிகுந்த ஆவலுடன் கூறல்.

Oral Composition:—

பாடசாலை வருஷம் எந்தெந்த மாதத்திலிருந்து எதுவரை என்றும், மற்றவை எந்தெந்த மாதத்திலிருந்து எதுவரை என் பதையும், இம்மாதங்களுக்குச் சரியான தமிழ் மாதங்களையும்

புரிதல். பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தின் அவசியத்தைத் தெரிதல். சென்ற வருஷத்திய கொண்டாட்டம் நடந்து தற்பொழுது எவ்வளவு காலமாகிறதென்பதைக் கணக்கிடல்.

மேலும் சென்ற வருஷம் நடந்த கொண்டாட்டத்தில் யார் தலைமை வகித்ததென்றும், என்னென்ன விஷயங்கள் நடந்தேறினவென்பதையும் சம்பாஷித்தல்.

Oral Composition & Tamil Composition:—

சென்ற வருஷம் நடந்த கொண்டாட்டத்தைப் பற்றி ஓர் வியாசம் எழுதுதல். இவ்வருஷம் நமது பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தை, சென்ற வருஷத்திலும் சிறப்பாய்க் கொண்டாடத் தீர்மானங் கொள்ளல்.

II. Planning Stage:—

இவ்வருஷம் நமது கொண்டாட்டத்தை எவ்வகையாய்க் கொண்டாடலாமென கலந்தாலோசித்தல்.

Oral Composition:—

தலைவரின் அவசியம்—விளம்பரங்கள்—பாடசாலை அலங்கரிப்பு—நடத்த வேண்டிய விஷயங்கள். இவை சம்பந்தமாய் அறிதல். தலைவர் விஷயமாய் சம்பாஷித்ததின் பேரில் நமது பாடசாலையின் மேனேஜர் அவர்களை வரவழைக்கத் தீர்மானித்தல்.

மேலும் இவ்விதமாய் வந்திருக்கும் அயல் நாட்டுப் பாதிரிகளெல்லாரும் வெள்ளையாயிருக்கக் காரணம் என்னவென்பதைப் பற்றி சம்பாஷித்தல்.

Geography:—

சீதோஷ்ண ஸ்திதி, பூமியின் கோளம், அக்ஷரேகைகள், தீர்க்க ரேகைகள் முதலியவைகளை அறிதல்.

நம் துரையை எவ்வாறு வரவழைப்போம் என சம்பாஷித்து, முடிவில் அவருக்கு எல்லோரும் ஒவ்வொரு அழைப்புக் கடிதம் எழுதி, அவைகளில் சிறந்ததை உபாத்தியாயர் மூலம் கொடுத்தனுப்பிக் கேட்டுவரத் தீர்மானித்தல்.

மேலும் நமது கொண்டாட்டத்திற்கு யார் யாரை வர வழைப்போமென்றும், எவ்வாறு அவர்களை வரவழைக்கலா மென்றும் சம்பாஷித்ததின் பேரில், சிலர் நோட்டீஸ் அடிக்கலா மென்று கூறினபடியால், அதற்கென ஆகும் செலவைக் கணித்தல்.

Civics:—

உள்ளூரில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களும், அவர்கள் எந்தெந்த இலாகாவுக்குச் சேர்ந்தவர்களென்பதும்.

Arithmetic:—

நோட்டீஸ் ஆகும் செலவைக் கணக்கிடல். இவை 100-க்கு, 500-க்கு, 1000-க்கு எவ்வளவாகிறதென்பதின் மூலம் சதவீதம் கண்டுபிடித்தல். அச்சுச் செலவு அதிகமாகிறபடியினாலும், நாம் சிலருக்கே அவசியமாய் நோட்டீஸ் கொடுக்கவேண்டியதாய் இருக்கிறபடியினாலும், கொடுக்கவேண்டியவர்களுக்குக் கைப்பிரதியில் கொடுத்துவிடத் தீர்மானித்தல்.

Tamil:—

சிக்கனத்தின் மேன்மை, டம்பாசாரத்தின் கெடுதல் முதலியவைகளை அறிதல்.

Tamil Poetry:—

ஆனமுதலில் அதிகம் செலவானால்... ... ... ...

பாடசாலை விஷயமாய் சம்பாஷித்ததின் பேரில், சிறு பந்தலிட்டு, மா இலைத் தோரணங்களாலும், வாழை மரங்களாலும், அரளிப் பூ முதலியவைகளாலும் அலங்கரிக்கத் தீர்மானித்தல்.

Tamil:—

நமது ஊரில் மா மரங்கள் எங்கே இருக்கிறது? எத்தனை வகையான மா மரங்களுண்டு? மாமரங்கள் விசேஷமாய் எங்கே அதிகம் உண்டு? பிரயோஜனமென்ன? (ஒரு வியாசம்) அரளி வாழை முதலியவைகளைப் பற்றியும் அறிதல்.

மேலும் எவ்வகையில் நமது கொண்டாட்டமிருந்தால் ஜனங்களுக்கு மிக்க பிரீதியாயும், பிரயோஜனமுள்ளதாயும் இருக்குமென்று யோசித்துச் சம்பாஷித்ததின் மூலம்,

1. அவசியமான சிலதை நாடகமாக நடித்துக் காட்டினல் நலமாயிருக்குமென தீர்மானங்கொள்ளல்.

Oral Composition:—

அவசியமும், பிரயோஜனமுமான விஷயங்களென்று தீர்மானித்த (1) படிப்பின் உயர்வு, (2) மதுவிலக்கு, (3) சுகாதார சம்பந்தமாய் ஈயினால் உண்டாகும் கெடுதல், முதலியவைகளைப் பற்றி அறிதல்.

2 Sub-Project: Planning:—

படிப்பின் மேன்மையைப் பற்றி எவ்வகையான ஓர் சம்பாஷணை தயாரிக்கலாமென கலந்து பேசியதில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை எழுதி அவைகளிலொன்று தெரிந் தெடுத்து, ஏற்ற சில பாட்டுகளையும் சேர்த்து, நடிக்கலாமெனத் தீர்மானித்தல். பின் மற்றவைகளையும் இதேபோற் செய்யத் தீர்மானித்தல். இவைகளுக்குத் தேவையான சில கதைப் புத்தகங்களை வாசித்தல்.

Tamil Reading:—

சில தமிழ்ப் புத்தகங்கள், மதுவிலக்குப் புத்தகம்—ஈ கொலை பாதகன்—சாதாரண சில வியாதிகள் முதலிய சில புத்தகங்களை கவனத்துடன் வாசித்தல்.

3. Sub-Project: Executing Stage:—

(Drama Composition)

கல்வியைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்லுதல்.

Tamil Stories:—

(a) இனி. வளர்த்திப் படித்த பையன்கள் கதை:
(b) இராஜாவின் இளையமகன் படித்ததினால் பட்டம் பெறல்.

(c) படித்த பையன் 10 ரூ. நோட்டுக் கண்டெடுத்தல்.
(d) படித்த கண்ணன் பெற்ற புகழ்.
முதலிய சிறு கதைகள்

ஷை கதைகளைத் துணையாகக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சொந்தமாய் உண்டு பண்ணல்.

Tamil Reading:—

அவர்கள் எழுதின கதைகளை வாசித்தல். பின் எல்லாவற்றிலும கலந்து, "திக்கற்ற லீலாவதியும் அவள் சகோதரனும்" என்ற கதையை உண்டு பண்ணல்,

Tamil writing:—

ஷை கதையை எழுதுதல். ஷை கதையை நாடக ரூபமாக மாற்றல்

Tamil Drama:—

ஏற்ற பழமொழிகளைச் சேர்த்து சம்பாஷணை ரூபத்தில் எழுதும் முறை தெரிதல். அவசியமான இடங்களில் ஏற்ற சில பாட்டுகளையும் அமைத்தல்.

Music:— (பாட்டுகள் இயற்றும் முறை தெரிதல்)

பின் இந்தப்படியே மதுவிலக்குப் பற்றியும், ஓர் சம்பாஷணை தங்களுக்குத் தோன்றுகிறபடி அமைத்து, தகுந்த பாட்டுகளைச் சேர்த்தல்.

Songs:— (குடியின் கெடுதல்)

பின் இராஜாங்கமுறை சம்பந்தமாய் ஏழைகளுடைய நியாயம் எவ்வாறு கவனிக்கப்படுகிறதென்பதை ஜனங்கள் அறியும் பொருட்டு இரு சிறு கேஸ்களை விசாரணை செய்து காட்டல்.

Civics:—

நியாயஸ்தலங்களும் நியாயாதிபதிகளும். வாதி பிரதிவாதி. கேஸ் கொடுக்கும் வகை. பலவகைக் குற்றங்களும் அவைகளின் தண்டனைகளும். இதுபோன்ற விஷயங்களை அறிதல். இதற்காக இரண்டு சம்பவங்களைச் சம்பாஷணை முறையில் தயார் செய்தல்.

Composing:—

இரு நியாய விசாரணைகள். இவ்வாறே ஈயினால் உண்டாகும் கெடுதல்களைக் காட்ட ஓர் சம்பாஷணை தயார் செய்தல்.

ஈயைப் பற்றி ஈயினால் உண்டாகும் கெடுதல்.

Hygiene:— வியாதி பரவல்.

Drawing:— ஈ வரைதல்.

தாங்கள் உண்டுபண்ணின நாடகங்களை ஒரு நோட்டில் ஏற்ற பாட்டுகளுடன் தொகுத்து எழுதி வைத்துக் கொள்ளல்.

Tamil writing:—

பாட்டுகளைப் பிரிவுப்படி எழுதும் விபரம்.

4. Sub-Project: Judging:—

கூடியான வரை தங்கள் சம்பாஷணைகள் ஒழுங்கான முறையில் இருத்தலைக் கண்டு சந்தோஷமுறல். இப்படியே ஒவ்வொன்றையும் தாங்களே உண்டு பண்ணிக் கொள்ள ஆவல் கொள்ளல்.

Main Project: Planning:—

நடத்தப் போகும் சம்பாஷணைகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்ற பையன்களை நியமித்து, அவரவர்களுக்குகந்த பாகத்தை எழுதி மனனம் செய்தல்.

Tamil writing:—

தங்கள் பாகங்களை காகிதத்தில் எழுதி வைத்துக் கொள்ளல், மனனம் செய்தல் அவரவர்களுக் குகந்த பாகத்தை ஏற்ற செய்கையுடன் நடித்துப் பாடி அப்பியாசப் படுத்தல்.

Drama:—

சபையில் நிற்கும், நடிக்கும், பாடும் வகை தெரிதல்.

Poetry:—

கனைபாகி கொம்பாகி... ... ... ...என்ற பாட்டின் அர்த்தம்—கருத்து தெரிதல்.

அப்படியே "கல்விக் கழகு கசடற மொழிதல்"

என்ற பாட்டின் அர்த்தம்-கருத்து.

தற்காலங்களில் நடக்கும் சினிமா, டிராமா முதலியவைகளைப் பற்றி சம்பாஷித்தல்.

General Knowledge:—

சினிமாவின் நன்மை-தீமைகள். இக் கொண்டாட்டத்திற்கு அவசியமாய் வாங்க வேண்டிய சில சாமான்கள். ஆகும் செலவு, முதலியவைகளின் சம்பாஷணை. இதற்கென ஏற்படும் செலவை கடைப் பிராஜெக்ட்டிலிருந்து எடுத்துக்கொள்ளத் தீர்மானம்.

III. Executing Stage:—

வெடி சாமான்கள் வாங்கி வரல்.

Arithmetic:—

வெடிஜாபிதாவைக் கடைக்குக் கொண்டுபோய்க் கடைக்காரனிடம் மொத்தத்தில் விலை கேட்டுச் சில்லரையில் வாங்கிவரல். (மொத்தத்தில் விலை பேசிச் சில்லரையில் வாங்குவதால் உண்டாகும் லாபம்) ஏற்கனவே தீர்மானித்தபடி கனம் துரையவர்களை நமது கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்கும் படியாய் ஓர் அழைப்புக் கடிதம் எழுதுதல். முன் தீர்மானித்த வருஷாந்திர கொண்டாட்டத்தைப் பற்றிச் சில நோட்டீஸ்கள் தயார் செய்தல். சில நீதி வாக்கியங்கள் எழுதுதல் சில சுவர் விளம்பரங்களை பொது இடங்களில் ஒட்டல்.

Tamil:—

பல வகை சுவர் விளம்பரங்கள் எழுதும் முறை தெரிதல். இரு திரைகளுடன் ஓர் மேடை தயார் செய்தல்

1. Sub-Project: Purposing:—

துரையைக் கண்யமாய் வரவேற்க என்ன செய்யலாமென்று கலந்து பேசி ஓர் பூமாலை கட்டத் தீர்மானித்தல்

Moral Study:—

பெரியோரை வரவழைக்கும் மரியாதை தெரிதல்.

2. Planning Stage:—

மாலை கட்டுவதற்குத் தேவையான அரளிப் பூ, துளசிச் நார் முதலியவைகளைப் பற்றிய சம்பாஷணை.

Nature Study:—

அரளியின் வகைகள். துளசியின் தன்மை, பிரயோஜனம், வாசனைப் பூக்களெவை? வாசனை இல்லகளெவை?

3 Executing Stage:—

பூக்கள் தேடி வரல்—மாலை தொடுத்தல்.

Handwork:—

பூக்களைப் பிடிப்பதிலும், தொடுவதிலும் நிதானம்.

General Knowledge:—

மாலைகட்டி ஜீவிக்கும் ஜாதியாரான பண்டாரங்களின் இயற்கை.

4. Judging Stage:—

கட்டின மாலை அழகாய் இருத்தலைக் கண்டு களிகூறல். பூக்கள் வாடிவிடாமல் தண்ணீர் தெளித்து இலைகளில் சுருட்டி வைத்தல்.

Arthmetic:— கடைகளில் மாலைகளின் விலைகள்.

Main Project: Executing Stage:—

பிள்ளைகள் பாகபாகமாகப் பிரிந்து மூங்கில் தேடிவரல் நார் தேடிவரல். கடப்பாரை முதலியவை தேடிவரல் குழி தோண்டிக் கால்களை நட்டு, பந்தல் வரைதல். ஒரு பகுதியார் தென்னை மட்டை, இலைகள் தேடிவரல். மற்ற பகுதியார் மா இலை தேடிவரல். மா இலைத் தோரணம் அமைத்தல். வாழை மரங்கள் தேடிவரல். பாடசாலையை அலங்கரித்தல், செடி வேலைகளைச் செய்கையில் உற்சாகத்தோடு கூடிய பொறுமையும் ஜாக்ரதையும்.

Handwork:— பலகை வேலைகள்.

Nature Study:—

மா மரம், வாழை மரம், தென்னை மரம் முதலியவைகள். பின் செண்டாக்களோடு ஓர் ஊர்கோலம் வருதல்.

Songs:—

நாடகத்துக்குச் சேராத பாடசாலையில் படித்த பாட்டு களைப் படித்தல். நடக்கவேண்டிய விஷயங்களைக் குறித்து ஓர் நிகழ்ச்சிக் குறிப்புத் தயார் செல்தல்.

Tamil:— நிகழ்ச்சிக் குறிப்புகள் தயார் செய்தல்

துரைக்கு மாலையிட்டு வரவேற்றல். பின்பு நிகழ்ச்சிக் குறிப்புப்படி யாவும் நடந்தேறல்.

Drama:—

பிள்ளைகள் சபையில் அச்சமின்றி நின்று தைரியமாயும், தெளிவாயும், பேசும், பாடும் திறமைகளை அடையவும் பழக்கங் கொள்ளல் பின் வந்தவர்களுக்கு வந்தனம் செலுத்தல்

Moral:—

வந்தனம் அல்லது நன்றி செலுத்துவது அவசியம். பழக்கம்.

## IV. Judging Stage:—

நடந்ததில் சரியாய் இருந்ததும், தவறினதுமான விஷயங் களைப்பற்றிய சம்பாஷணை. எடுத்த காரியத்தை தொடுத்து முடித்ததற்காக ஆனந்த முறல். இதற்கொத்த சில வாக்கியங் களைத் தெரிதல்.

Tamil:— பழமொழிகள். "காரியம்"

1. எடுத்த காரியத்தைத் தொடுத்து முடி.
2. தூக்கி வினை செய்.
3. செய்வனத் திருந்தச் செய்.
4. நுண்ணிய காரியமும் எண்ணித்துணி.

இதற்கென தயாரித்த சில நீதி வாக்கியங்களை பாடசாலை யில் மாட்டி வைத்தல்.

# பிராஜெக்ட்:— வகுப்புத் தோட்டம்.
## 5-ம் வகுப்பு,

J. ஜான் சுந்தரராஜ் உபாத்தியாயர்,
கம்யூனிட்டிப் பாடசாலை, ஈரோடு.

Purposing Stage:—

நம் தேசத்தில் முக்கியமான ..கத்தொழில்கள் எவைகள்? என்ற கேள்விக்குப் பயிர்த்தொழிலும் (விவசாயம்) நெசவுத் தொழிலும் என்றனர். குறைந்தது 90% வீதம் விவசாயத்தைச் செய்கின்றனர் என்றால் இதற்குக் காரணங்கள் எவை என்று பார்த்தல்.

1. பரம்பரையான தொழில் எப்படி?

சரித்திரம்:—

புத்தகத்திலுள்ள 2-ம் பாடத்தில் 'ஆசிரியர்களும் அவர்களின் தொழிலும்' என்ற பத்தியை வாசித்தல். அவர்கட்கு விவசாயமே சிறந்த தொழிலாகும்.

2. விவசாயத்திற்கு ஏற்ற வசதிகள்.

(a) சமவெளிகள்.
(b) சீதோஷ்ணம்.
(c) தண்ணீர் வசதி.

பூகோளம்:—

இந்தியாவின் இயற்கையமைப்பு:

(1) மலைப் பிரதேசம்.
(2) இந்துஸ்தான் சமவெளி.
(3) தக்ஷிண பீடபூமி.
(4 கடற்கரைப் பிரதேசங்கள்.

.. தோஷ்ணம்:

இந்தியா எம்மண்டலத்தில்? படத்தைக்கொண்டு இந்தியா வியாபித்துள்ள அக்ஷரேகைகளைக் கண்டுபிடித்தல் (8° South—34° North)

விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது? மழையின் மூலம்.

போது அறிவு:—

மழையையே எதிர்பார்க்கும் நிலங்கள்:—
புன் செய்—நன்செய். ஒவ்வொன்றிலும் விளையும் தானியங்கள்.

மழை எவ்வாறு உண்டாகிறது? எப்படிப் பெய்கிறது? என்ற கேள்விகளின் மூலம் பருவக் காற்று மழையைப் பற்றிப் படித்தல்.

பூகோளம்:—

பருவக் காற்று என்றால் என்ன? இப்பிரதேசத்திலுள்ள நாடுகள்—பலவிதப் பருவக்காற்று:

தென் மேற்கு (கோடை) — மே, அக்டோபர் வரை.
வட கிழக்கு (மாரிகாலம்) — நவம்பர்—ஏப்ரல் வரை.
பாடப்புத்தகத்திலிருந்து தெளிவாகப் படித்தல்.

விவசாயம் விருத்தியடைய அரசாங்கத்தார் கையாளும் முயற்சிகளென்ன?

தேச பரிபாலனம்:—

விவசாய இலாகா—நோக்கம்—கலாசாலை—பண உதவி—
(on page 79, Chap vii)

இதன் மூலம் சுமார் 35 கோடி ஜனங்கள் பிழைக்கிறார்கள். இத்தொழில் மூலம் இலாபமா, நஷ்டமா என்பவைக் கணக்கின் மூலம் கண்டுபிடித்தல்.

கணிதம்:—

ஒரு குடியானவனின் வருஷ வரும்படி சுமார் ரூ. 1500.

| | | |
|---|---|---|
| செலவு: | குத்தகை | ரூ 700. |
| | கல்யாணம், கருமாதி | ,, 200. |
| | சாப்பாடு | ,, 120. |
| | கடன் | ,, 100. |

9 வருஷத்தில் மீதி எவ்வளவு? இவ்வாறு பல கணக்குகள்.

தமிழ்:— கதை:

திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு—இதன் சிறப்பை உணர்ந்த புத்தகத்திலிருந்து ஒருசெய்யுள்—பாடப்புத்தகத்தில் 4-ம் பாடத்தைப் படித்தல்.

ஆகவே இவையிரண்டிலும் சிறந்தது, 'விவசாயம்' இத் தொழிலைப் பெரியவர்கள்தான் செய்ய முடியுமா? என்றதும் பிள்ளைகள் கூடச் செய்யலாம் என்றனர்.

'நமது தாய்மொழி வாசகம்' முகப்பு அட்டையில் பிள்ளைகளும் ஆசிரியருமாகத் தோட்டவேலை செய்வதைக் கண்ட பிள்ளைகள், தோட்டம் போடுவது 'விவசாயத்தின் ஒரு பகுதி' என்பதைச் சம்பாஷித்தனர்.

தவிர வருஷ ஆரம்பமானதால் வகுப்புத் தோட்டம் போடுவது பாடசாலைக்கும் நன்றாயிருக்கும், விவசாயம் செய்தது போலுமாகுமாதலால், பிள்ளைகளே 'வகுப்புத் தோட்டம் போடுவது நல்லது' என்பதைத் தீர்மானித்தல்.

வியாசம் எழுதுதல்:—

'வகுப்புத் தோட்டம் போடுவதின் அவசியம்'.

Planning Stage:—

தோட்டம் போடலாம் என்று தீர்மானித்த பின்பு எப்படிப்பட்ட தோட்டம் போடலாம்?

பொது அறிவு:—

(1) காய்கறித் தோட்டம்—போடப்படும் காய்கறிகளைப் பற்றிப் படித்தல்.

(2) பூந்தோட்டம்.

கணிதம்.—

(சராசரி) தோட்டவேலையை ஒட்டி அநேகம் கணக்குகள் போடுதல்.

காய்கறித் தோட்டம் வகுப்புமுன் போட வசதியின்மை யால் பூந்தோட்டம் போடலாம் என முடிவு செய்தல். தோட்டம் போடுவதற்கு வேண்டியவை. 1. நிலம்.

இயற்கைப் பாடம்:—

நிலம்:— கரிசல், செவ்வல், வண்டல்.

பாதுகாப்பு:— உயிர் வேலி, சுவர் வேலி, கம்பி வேலி.

தண்ணீர்:— கிணற்றிலிருந்து.

(2) கருவிகள். வேண்டிய கருவிகள்.

மண்வெட்டி 4. மண்கொத்திகள் 2. கூடை 4.

இவை நமக்கு எப்படிக் கிடைக்கும்? என்றதும் பிள்ளைகள் தோட்டவேலை ஆசிரியரிடமிருந்து கிடைக்கு மென்றதால் தலைமை ஆசிரியர், மானேஜர் இவர்கள் மூலம் ஒரு கடிதம் எழுதுதல்.

சித்திரம்:— கருவிகளின் படம் வரைதல்.

தமிழ்:—

கடிதம் எழுதும் முறையைப் போதித்து, பாடப் புத்தகத்திலிருந்து (14-ம் பாடம்) பலவகைக் கடிதங்களைப் படித்த பின்பு கடிதம் எழுதுதல்.

நாம் நமது தோட்டத்தின் நீளம், அகலம் இவற்றைக் கண்டுபிடித்துச் சுற்றளவு, விஸ்தீரணம் கண்டு பிடித்து உத்தேசமாகப் பாத்தி பிரிக்கலாம்.

கணிதம்:—

நீட்டலளவை: (வாய்ப்பாடு)

சுற்றளவு (நீ + அ) × 2

பரப்பளவு நீ × அ.

இதையொட்டி அநேகம் கணக்குகள்.

## Executing Stage:—

சரீரசாஸ்திரமும், சுகாதாரமும்:—

வேலை செய்யும் போது சம்பந்தப்பட்ட பாகங்கள்-தசை பூட்டுகளின் அசைவு-இரத்த ஓட்டம்-இவைகளை விரிவாகப் படித்தல்.

இதனால் தான் தேகாப்பியாசம் முக்கியமாக இருக்கிறது.

பாத்தி கட்டின பின்பு வறண்ட நிலத்தில் விதைகளை நடலாமா? ஏன் நடக்கூடாது?

தண்ணீர் விடுதல் அவசியம்.

இயற்கைப் பாடம்:—

மனிதர்கள் உயிர் வாழக் காற்று, தண்ணீர், ஆகாரம் அவசியமாயிருப்பது போல் விதைகள் செடியாகக் காற்று, தண்ணீர், வெளிச்சம், உஷ்ணம் தேவை—செடிகட்கும் உயிர் இருக்கிறது.

விஞ்ஞானம்:—

ஸர் ஜே. சீ. போஸ் செடிகட்கு உயிர் உண்டு என்பதைக் கண்டு பிடித்தார். செடிகள் சுவாசிக்கின்றன, சாப்பிடுகின்றன, உணர்கின்றன.

தண்ணீர் ஊற்றின பின்பு விதை போடலாம். விதை போதிய அளவு இல்லாததால் 'ஆடிப்பட்டம்' வந்து மழை பெய்தவுடன் விதைகள் போடலாம் எனத் தீர்மானித்தல்.

செடி வளர்வதைக் குறிக்கத் தோட்டக் குறிப்புப் புத்தகம் ஒன்று தயார் செய்ய வேண்டும்.

பிள்ளைகள் தோட்டம் போட்ட பிறகு முக்கியமான வேலை என்ன? என்றதும் பிள்ளைகள் பல விதமாகத் தர்க்கித்துக் கடைசியில் 'தோட்டப் பாதுகாப்பு' அவசியம் என்றனர்.

இவ்வேலைகட்கு உதவி செய்த அனைவர்க்கும் பிள்ளைகள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருப்பதை உணர்தல்.—

பிள்ளைகளாகிய தாங்களும் பயிர்த்தொழிலின் வேலையை ஒருவாறு செய்து முடித்ததை நினைத்தும் தாங்களும் மாணவ விவசாயிகள் என்று பட்டம் பெற்று விட்டோம் என்று மகிழ்ந்தார். பாத்திகளை அழகாகச் செங்கற்களால் செய்துள்ளதைப் பார்த்து மகிழ்ந்தனர்.

தோட்ட வேலையும் மற்ற காரியங்களும் சரிவர நடக்கிறதா என்பதை எப்படிக் கவனிக்கலாம் என்றதற்கு ஒருவனே பார்த்துக் கொள்ளலாம் என்றனர். ஒருவன் பார்ப்பது மிகவும்

கஷ்டம். இதனாலன்றோ இராஜாங்கத்தாரும் எல்லா அலுவல்களையும் ஒரு சிலரே பார்க்காமல் பல இலாக்காக்களாகப் பிரித்துள்ளனர்.

தேச பரிபாலனம்:—

பல இலாக்காக்களைப் பற்றிப் படித்தல்.

1. வரி வசூல் இலாகா, 2 போலீஸ் இலாகா, 3. கல்வி இலாகா, 4 நியாய பரிபாலன இலாகா, 5 வைத்திய இலாகா, 6. சுகாதாரம், 7. விவசாயம்.

பின்பு பிள்ளைகள் தங்களுக்குள்ளே அநேகம் கமிட்டிகளை நியமித்துக் கொண்டனர்.

1. தோட்ட மேற்பார்வைக் கமிட்டி.
2, நாட்டக் குறிப்புக் கமிட்டி.
3. பழமொழிகளைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டி.

பிள்ளைகள் மேற் கூறினபடி பல கமிட்டிகளாகப் பிரிந்து வேலைகளை ஒழுங்காகச் செய்து வரத் தீர்மானித்தல்.

பிள்ளைகள் தாங்கள் எடுத்துக் கொண்ட வேலையை மனாம்பியமாயுப் சித்தியுடனும் செய்து விட்டதைக் குறித்தும், கைத்தொழிலின் மேன்மையைச் சொல்லும் பொருட்டும் ஓர் பாட்டுப் பாடி மகிழ்ந்தனர்.

பாட்டு.

பல்லவி

இந்த—அழியாக் கைத் தொழிலால் நல் வழியாகுமே

சரணம்

1. தோட்டவேலையில் நாங்கள் நாட்டங்கொள்வோம் எந்நாளும்
ஒட்டமாய் வேலை யாவும் முடிப்போம்—கண்ணாரக் கண்டு
களிப்போம்—நாளும்— இந்த

2. கூடை மண்வெட்டி கொண்டு வேடிக்கையாக நின்று
ஜோடியாக நிலத்தைக் கொத்தி—சீக்கிரம்
சமப் படுத்தினோமே— இந்த

## ஈரோடு வட்டாரங்களில் "நவீனக் கல்வி முறையில்" பயின்ற சில உபாத்தியாயர்கள் இருக்கும் சில பாடசாலைகளில் நான் கண்டதென்ன?

### உங்களுக்குத் தெரியுமா?

Sri T. V. Nilakanta Sastriar B. A. L. T.
Senior Deputy Inspector of Schools, Erode Range, Erode.

கல்வியின் பெருமையை நீங்களெல்லோரும் கேட்டிருக்கிறீர்கள். "ஆரம்பக்கல்வி", "முதியோர் கல்வி" அவைகளின் நோக்கங்கள், இலக்ஷியங்கள் இவைகளைப் பற்றி இவ்விடத்தில் நான் சொல்ல வரவில்லை. சாதாரண போதனா முறைப் பாடசாலையில் பயின்று உபாத்திமைத் தொழிலில் இருந்து வருபவர்களைப்பற்றியும் நான் சொல்ல வரவில்லை.

"நூதனக் கல்வி" அல்லது "செய்முறைக் கல்வி", அல்லது "ப்ராஜெக்ட் முறைக்கல்வி", அல்லது "சுயநோக்க முறைக் கல்வி" என்று பல பெயர்களால் அழைக்கப்படும் "நூதனக் கல்வி முறையில்" பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களைப் பற்றி சில குறிப்புகளைச் சொல்லத் துணிகிறேன்.

"நவீனக் கல்விமுறை" அல்லது "செய்முறைக் கல்வி" ஆரம்பப் பாடசாலைகளுக்குப் புத்துயிரை அளிக்கிறது. புத்தகக் கல்வியையும், செய்முறைக் கல்வியையும், இவைகளின் குறை குணங்களையும் பற்றி நூதனக் கல்வி முறையில் பயின்ற முறையில் பயின்ற உபாத்தியாயர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். இந்த நூதனக் கல்வி போதனாமுறைப் பாடசாலை நமது தென்னிந்தியாவில் சென்னை ராஜதானியில் ஈரோடு நகரத்தில் "லண்டன் மிஷன் சபையாரால்" ரெவ் H. A. பாப்லி துரை அவர்களின் ஆதீனத்தின் கீழ் ஆசிரியர் ஸ்ரீ J. T. ராஜனாயகம் அவர்களின் உதவியாலும் சமீப சில வருஷங்களாக, திருப்தியாகவே

நடைபெற்று வருவதை நாமெல்லாரும் அறிவோம். இம்முறையானது மிகவும் உன்னதமானது. நல்ல அறிவையும், திறமையையும், சக்தியையும் சிறுவர்களுக்கு அளிக்கிறது.

ஈரோடு வட்டாரத்தில் பல நிர்வாகக்களில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளில் சுமார் 88 பள்ளிக் கூடங்களில் 125 உபாத்தியாயர்கள் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் இந்த நூதனக் கல்வி முறையைச் சரியானபடி முழுக் கவனம் செலுத்தி தங்களிடம் ஒப்புவித்திருக்கும் மாணவ மாணவிகளுக்கு முழு வளர்ச்சியையும், கொடுக்கக் கூடிய கல்வியைப் புகட்டுகிறார்களா? அல்லது இல்லையா? என்று பார்க்குமிடத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் சரியானபடி கவனம் செலுத்தவில்லை என்றே கூற வேண்டும். ஏன்?

போதனுமுறைப் பாடசாலையை விட்டமாத்திரத்தில் சில ஆசிரியர்கள் ஒரு உபாத்தியாய நுள்ள பாடசாலையில் அமருகிறார்கள். சிலர் இரண்டு உபாத்தியாயர்கள் உள்ள இடத்தில் அமருகிறார்கள். அவர்களில் ஒருவர் நவீனக் கல்விக் கோட்பாட்டைத் தெரிய விருப்பமில்லாதவர். சாதாரணப் பாடசாலையில் பயின்றவர். அல்லது சிலர் சாதாரணப் போதனுமுறைப் பாடசாலையில் பயின்ற தலைமை உபாத்தியாயரின் கீழ் வேலை செய்ய நேரிடுகிறது. சில தலைமை உபாத்தியாயர்கள் இந்த "செய்முறைக் கல்வி"யின் தத்துவத்தைப் படிக்காமற்போனாலும் நினைக்கக்கூட மறுக்கிறார்கள். இப்பேர்ப்பட்டப் பாடசாலைகளில் வேலை செய்துவரும் உபாத்தியாயர்கள் இந்நூதன முறையில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதாகப் பாவனை செய்கிறார்கள். தகுந்த செய்கை முறைகளைப் பொறுக்கி எடுப்பதுமில்லை தகுந்தபடி சாமான்களும் இல்லை என்றும் சொல்லி வருகிறார்கள்.

தவிர, கல்வி இலாகா எல்லாப் பாடங்களுக்கும் ஓர் புதிய பாடத்திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி கல்வியைக் கற்பிக்கும்போது அதற்குத் தகுந்தாற்போல் "ப்ராஜெக்ட்டு"கள் எடுத்த முடியாதவர்களாயுமிருக்கிறார்கள். பெற்றோர், புத்தகத்தில் எத்தனை பக்கம் கற்பித்திருக்கிறார்கள் என்று பிள்ளைகளைக் கேட்க ஆரம்பிக்கிறார்கள். பிள்ளைகளின்

முழு வளர்ச்சிக்காகவும் பாடத்திட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கி றதேயொழிய பாடத்திட்டத்துக்காகப் பிள்ளைகள் உண்டாக வில்லை. கால அட்டவணையும் ஒரு பக்கத்தில் பாதிக்கிறது. சாதாரணப் பாடசாலைகளைப் போல் பாடத்திட்ட நிர்ணயம் வகுத்துப் போதிக்க முடியாது.

தற்காலம், வாரத்தில் மூன்று வேளை இதற்காக இந்நூதன முறையை அனுசரிக்கக் காலத்திட்டம் எல்லாப் பாடசாலைகளி லும் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் ஆகையினால் பாடத் திட் டத்தின்படி எல்லாப் பாடங்களையும் இந்நூதனக் கல்வி முறை யினால் குறித்த காலத்திற்குள் முடிக்க முடியாமலும் இருக்கி றார்கள்.

இம்முறையில் பயின்ற உபாத்தியாயர்கள் சரிவர வேலை செய்யவேண்டுமானால் சில சௌகரியங்கள் அவர்களுக்கு வேண்டும்.

1. ஆரம்பப் பாடசாலையில் எல்லா வகுப்புகளிலும் இதே மாதிரியான "செய்முறைக் கல்வி" யின் படி போதனாமுறைப் பயிற்சிபெற்ற உபாத்தியாயர்களே தலைமை உபாத்தியாயர் உள் பட நியமிக்கப்பட வேண்டும்.

2 ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி நிர்வாகத்திலுள்ள பல பாடசாலைகளில் வேலை செய்துவரும் இந்நூதன முறைக் கல்வி பயின்ற உபாத்தியாயர்களைச் சில குறிப்பிட்ட பாடசாலை களில் ஒருங்கு சேர்த்து வேலை செய்யும்படிச் செய்ய வேண்டும்.

3. அவர்களுக்கு, அப்பாடசாலை நிர்வாகஸ்தர்கள் தகுந்த சாதனங்களையும், புத்தகங்களையும் கொடுத்துதவ வேண்டும்.

4 பாடத்திட்டப்படியும், கால அட்டவணைப்படியும் வேலை செய்ய வேண்டும் என்கிற விதியை சற்று விலக்க வேண்டும்.

5 தவிர, உபாத்தியாயர்களும் தங்களுடைய இலட்சி யத்தைக் கைப்பிடித்து, பொறுப்பையும் உணர்ந்து, குழந்தை

களின் உள்ளத்தையும் அறிந்து, பெற்றோர்களின் மனப்பான்மையும் மாறி எல்லோருடைய ஆசீர்வாதத்தினுல் இம்முறையில் பயின்ற உபாத்தியாயர்கள் உலகிற்கு ஓர் வழிகாட்டிகளாகவே இருப்பார்கள். தவிர பரீக்ஷாதிகாரிகளும் இம்முறையைச் சரியா அறிந்திருக்க வேண்டும். இப்படிச் செய்தால் பாடசாலைகளும அதில் கற்கும் மாணவ மாணவிகளும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை!.

லண்டன் மிஷன் பில்டிங்டன் பிரஸ், ஈரோடு. 21-8-42

# இப்பத்திரிகையின் நோக்கம்

ஈரோடு லண்டன் மிஷன் சமூகப் போதனாமுறைப் பாடசாலையில் பயின்றுவந்த ஆசிரியர் எல்லோரும் தாங்கள் கற்றுக்கொண்ட முறையை அநுசரித்துப் பாடசாலையை நடத்துமாறு அவர்களை ஏவிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் இச்சிறு பத்திரிகை வெளியிடப்பட்டது. ஆசிரியருக்குத் தக்க உதவி புரியவும், இவர்களுக்குப் புதிய ஊக்கம் உண்டாக்கவும் வேண்டுமென்று விருப்புற்று இப்பத்திரிகையை வெளியிட்டுள்ளோம்.

புதிய பிராஜெக்ட் அட்டவணைகளையும் அம்முறைக் கேற்ற சில ஆலோசனைகளையும், ஆசிரியர் இதில் காணலாம். நமது பழைய மாணவர் யாவரும் இதைப் பெற்றுக்கொண்டு சந்தாதாரராவார்கள் என்று நம்புகிறோம், 8 அணா ஸ்டாம்பு வைத்து மேற்கண்டவருக்கு அனுப்பினால் அவர்கள் ஒரு வருஷத்திற்குப் பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். வாசிக்கும் ஆசிரியர் யாவரும் இவ்வாறே செய்து தங்கள் பழைய பாடசாலையின் ஆசிரியர்களை மகிழ்விப்பார்களென நம்புகிறோம்.


# நவீனக் கல்வி

பத்திராதிபர்கள்:— சங். H. A. பாப்லி.
ஸ்ரீ J. T. ராஜநயம்.

வருஷம் நான்குமுறை பிரசுரிக்கப்படும்.

வருட சந்தா 6 அணா.



# சிறுவர் அறிவுக் கதிர்.

ஆசிரியர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இன்றியமையாத ஓர் இனிய மாதப்பத்திரிகை. தனிப்பிரதி 1½ அணா

வருட சந்தா:— உள்நாடு: ரூ. 1-0-0. வெளிநாடு: ரூ. 1-8-0.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு, S. I. Ry.

# ஆரம்பப் பாடசாலை
# விளையாட்டுகள்.

85 படங்கள், அநேக பாட்டுகள் பலவித விளையாட்டுகள், நிறைந்து விளங்கும் இவ்விளையாட்டுப் புத்தகம் ஸ்ரீமான் E. S. ஆறுமுகம் அவர்களால் இயற்றப்பட்டது எல்லா எலிமெண்டரிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவசியமான நூல் இதுவே.

Foreword by Dr. G. F. Andrews, B. A., L. T. (Madras) M. A. Ph. D. (Columbia) Senior Physical Director, Madra

விலை ரூ 1—4—0

கிடைக்குமிடம்:— E. S. ஆறுமுகம்,
உடற்பயிற்சி ஆசிரியர்,
L. M. டிரெயினிங் ஸ்கூல், ஈரோடு

---

## சென்னை சர்க்கார் ஆரம்பப் பாடசாலையின்
# புதுப் பாடத் திட்டம்.

## GOVERNMENT OF MADRAS.
### The Revised Syllabus for Elementary Schools.

தமிழ் மொழிபெயர்ப்பு: பண்டிதர் K. J வேதமுத்து அவர்களால்

1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை. விலை 2 அணா.
6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை. விலை 2 அணா.

கிடைக்குமிடம்:— சம். H. A. பாப்லி,
'நவீனக் கல்வி'
ஈரோடு.